09.08.2023

அசல் வழக்கு எண்: 334/2011

வா.சா.1 சாட்சி பாஸ்கர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நல்லமுறையில் பதிந்து கொடுக்க வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் நிலையூர் பிட்1ல் சர்வே எண். 16/1A, 1B ஆக இருந்து தற்போது 16/1A1 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. எவ்வளவு தொகைக்கு கிரையம் பேசப்பட்டது என்றால் ரூ.75,000/- கிரையம் பேசி ரூ.50000/- முன்தொகையாக கொடுத்துள்ளேன். தாவா சொத்து என்ன சொத்து என்றால் ஓட்டுவீடு ஆகும். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன்.

வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த ஆவணத்தில் யார் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் கிரையம் வாங்கும் நபர்களாக நானும், எனது மனைவியும் கையொப்பம் செய்துள்ளோம். சாட்சி கையொப்பம் எனது சார்பாக திருப்பரங்குன்றம் சந்திராபாளையத்தில் உள்ள ராஜாராம் என்பவர் கையொப்பம் செய்துள்ளார். மற்றொரு சாட்சியாக கிரையம் கொடுப்பவரின் கணவர் கையொப்பம் செய்துள்ளார். ராஜாராம் என்பவர் எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் ராஜாராம் என்பவர் பத்திர அலுவலகத்தில் வழக்கமாக அனைவருக்கும் சாட்சி கையொப்பம் செய்பவர்.

தாவா சொத்தின் மதிப்பு எவ்வளவு என்றால் தற்போது ரூ.1,00,000/- அல்லது ரூ.1,25,000/- இருக்கும். தாவா சொத்தின் மதிப்பை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் வட்டிக்கு பணம் கொடுத்து தொழில் செய்து

வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி மருத்துவ செலவிற்காக என்னிடம் ரூ.50,000/- 3 தவணைகளாக கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. பிரதிவாதி முறையாக வட்டி செலுத்தி வந்தார் என்றால் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. நானும், பிரதிவாதியும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதி தற்போது வரை ரூ.20,000/- வட்டியாக செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு படிப்பறிவு இல்லை என்றாலும், அதனை பயன்படுத்தி கடன் பத்திரம் என்று கூறி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்தின் மதிப்பு சுமார் ரூ. 12,00,000/- இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் 2 வது பரிகாரமாக நான் கொடுத்த முன்பணத்திற்கு 24% வட்டியுடன் செலுத்த வேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கடன் தொகையை செலுத்துவதற்கு தயாராக உள்ளார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.